මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் அமைச்சு
**MINISTRY OF FINANCE AND PLANNING**

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: 2484500, 2484600, 2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94) - 11 - 2449823
වෙබ් අඩවිය / வெப்சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/CBP/1/1-2010(II)
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2010.04.30

**வரவுசெலவு சுற்றறிக்கை இல: 147**

**அனைத்து அமைச்சர்களின் செயலாளர்களுக்கும்**
**மாகாண சபைகளின் பிரதான அமைச்சர்களுக்கும்**
**திணைக்கள தலைவர்களுக்கும்**

**2010 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேறும் வரையிலும் திரட்டிய நிதியிலிருந்து செலவினங்களை மேற்கொள்வதற்கான அங்கீகாரம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 150(3) இன் ஏற்பாடுகளின் கீழ் புதிய பாராளுமன்றம் கூடும் திகதியிலிருந்தும் 2010 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேறும் வரையிலுமாக 3 மாத காலத்திற்கு அரச சேவைகளையும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் தடங்கலின்றி நிறைவேற்றுவதற்காக அமேத சனாதிபதி அவர்கள் திரட்டிய நிதியிலிருந்து தேவையான ஒதுக்கீடுகளை மேற்கொள்ளுமாறு அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

02. இதற்கமைவாக, 2010.05.01 ஆம் திகதியிலிருந்து ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேறும் வரை 3 மாத காலத்திற்கு ஒவ்வொரு வாக்குப்பணத்தின் கீழும் ஒதுக்கப்பட்டுள்ள செலவினம் 1 ஆம் அட்டவணையின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளதோடு 2 ஆம் அட்டவணையானது அந்தந்த வாக்குப்பணத்திற்கான முற்பண கணக்கு வரையறைகளையும் காட்டுகின்றன. செலவினங்கள் இவ்வரையறைகளை விஞ்ஞாதவாறு நிறுவனங்களின் தலைவர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

03. வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் கீழ் எதிர்வரும் 3 மாத காலங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளையும் வாக்குப்பணம் மற்றும் வாக்குப்பண தலைப்புகளுக்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள குறியீட்டு இலக்கங்களையும் அத்தோடு புதிய அமைச்சுக்களின் உருவாக்கலுக்கமைவாக எவ்வாறு இந்த செலவினங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டுமென்ற அறிவுறுத்தல்களையும் அனுப்புவதற்கான விரைவான நடவடிக்கையை தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம் மேற்கொள்ளும்.

04. இதற்கமைவாக, கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களிலும் ஏனைய ஆவணங்களிலும் காட்டப்படவேண்டிய அங்கீகாரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(i) பொதுச் சேவைகளுக்காக - அரசியலமைப்பின் 150(3) என்ற உறுதியுரையின் கீழ் கொடுக்கப்படும் அங்கீகாரம்.

| | | |
|---|---|---|
| (ii) | முற்பண கணக்கு விடயங்களுக்காக - | அரசியலமைப்பின் 150(3) என்ற உறுதியுரையின் கீழ் கொடுக்கப்படும் அங்கீகாரம். |
| (iii) | விசேஷ சட்ட விடயங்களுக்காக - | 2010 ஆம் ஆண்டின் அங்கீகாரம் இல. 1. |

05. 2010 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்ட வரைவை தயாரிப்பதற்காக மே மாதம் 10 ஆம் திகதியிலிருந்து அமைச்சுக்களுடன் கலந்தாலோசனைகளை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதினால் உங்களின் அமைச்சு தொடர்பான வரவுசெலவு மதிப்பீடுகளை தயாரிப்பதற்கான பூர்வாங்க செயற்பாட்டை ஆரம்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள். 2010 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு மதிப்பீடுகள் பாராளுமன்றத்தில் தாமதமின்றி முன்வைக்கப்பட வேண்டுமாதலால், அனைத்து அமைச்சுக்களும் அவர்களின் ஒத்துழைப்பை நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

பி.பீ. ஜயசுந்தர
திறைசேரிக்கான செயலாளரும்
நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கான செயலாளர்.